# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. I,

## Present : Tmt.M.Anusuruthi, B.A.,B.L.,(Hons)

**Judicial Magistrate No.I,**
**Tiruchirappalli.**

## CC.843/2022

Deposition of Witness: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | நடராஜன் | Father Name | சப்பாணி |
| Village | நகர் கிராமம் | Taluk | லால்குடி தாலுக்கா, திருச்சி |
| Calling | | Age | 67/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969(Central Act 44 of 1969) on the day of 10.07.2025

(எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**முதல் விசாரணை(அரசு தரப்பில்)**

1. நான் தற்போது திருச்சி, லால்குடி தாலுக்கா, நகர் கிராமத்தில் வசித்து, வயோதிகத்தின் காரணமாக வீட்டில் இருந்து வருகிறேன். நான் சம்பவ சமயத்தில் மாயாஸ் ஹோட்டலில் வாட்ச்மேனாக வேலை பார்த்து வந்தேன். கடந்த 11.04.2022ம் தேதி இரவு 09.45 மணிக்கு அண்ணா சாலையில் எனது மருமகன் பிரகாஷ் என்பவர் என்னை அழைத்து செல்வதற்காக வந்து, என்னை கூட்டி சென்றபோது, என் இரண்டு மகன்கள் சிவக்குமார் மற்றும் சுதாகர் ஆகிய இருவரும், சுதாகர் வண்டி ஓட்ட, சிவக்குமார் பின்னால் அமர்ந்து வந்து கொண்டிருந்தபோது, காவேரி பாலத்தின் அருகில் வந்தபோது, 7773 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் வண்டி வந்தபோது, வளைக்க தெரியாமல் வந்து, என் மகன்கள் வந்த வண்டியின் மீது மோதியதில், சிவக்குமார் மீது வண்டி ஏறிவிட்டது. சுதாகருக்கு காயம் ஏற்பட்டது.

2. பின்னர், அவர்களை சிவக்குமாரை திருச்சி அரசு மருத்துவமனைக்கும், சுதாகரை அண்ணாசிலை அருகில் இருந்த ஒரு மருத்துவமனைக்கும் சிகிச்சையில் சேர்த்துள்ளனர். என் மகன் சிவக்குமார் என்பவர் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். பின்னர், மறுநாள் மதியம் 02.00 மணிபோல எனது மகன் சிவக்குமாரின் உடலைப் பெற்றுக்கொண்டேன். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநர் ஆஜர் எதிரிதான். பின்னர், காவல்நிலையம் சென்று சம்பவம் குறித்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான், அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில் )**

1. நான் கையொப்பம் செய்த புகாரை யார் எழுதினார்கள் என்றால், போலிசார் எழுதி, என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். நான் மாயாஸ் ஹோட்டலில் வேலை பார்த்த விபரத்தை போலிசார் விசாரணையிலும், புகாரிலும் தெரிவித்துள்ளேன் என்றால்,

சரிதான். விபத்து நடந்த இடம் நான் வேலை செய்யும் கடையில் இருந்து ஒரு பர்லாங் தூரம் இருக்கும் என்றால், சரிதான். விபத்து நடந்தது குறித்து என்னிடம் யார் கூறினார்கள் என்றால், நானும் எனது மருமகனும், சிவக்குமார், சுதாகர் சென்ற வாகனத்தின் 10 அடி தூரத்தில் பின்னால் தான் சென்று கொண்டிருந்தோம்.

2. விபத்து நடந்த இடமானது, காவேரி பாலம், ஸ்ரீரங்கம் பாலம், சத்திரம் பேருந்து நிலையத்தில் இருந்து வரும் ரோடு ஆகியவை இணையக் கூடிய இடம் என்றால், சரிதான். அந்த இடத்தில் சிக்னல் இருக்கும் என்றால் சரிதான். சிக்னல் போட்ட பின்னர் தான் வண்டிகள் செல்ல முடியும். பொதுவாக, நாங்கள் ஸ்ரீரங்கம் வழியாக தான் எங்கள் ஊருக்கு சென்றேனா என்றால், நான் நேராக சென்று, மாம்பழ சாலை வழியாக செல்வோம். நான் சொன்னதுபோல சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால், சரியல்ல.

3. எனது மகன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் இடது புறம் உள்ள தடுப்பு சுவரின் மீது மோதி, அவர் கீழே விழுந்ததால், அவர்கள் இருவருக்கும் காயம் ஏற்பட்டது என்றால், சரியல்ல. அருகில் இருந்த மருத்துவமனையில் இருந்த ஆம்புலன்ஸின் டிரைவர் எனது பெரிய மகனை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார் என்றால், சரியல்ல. சம்பவயிடத்தில் நானோ எனது மருமகனோ இருந்ததிருந்தால், நாங்கள் தான் அவரை மருத்துவமனையில் சேர்த்திருப்போம் என்றால், சரியல்ல. காயம்பட்ட எனது இரண்டாவது மகன் தானாகவே நடந்து சென்று அருகில் இருந்த Frontline மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தார் என்றால், சரியல்ல.

4. சம்பவம் நடந்தஉடன் அருகில் இருந்த போலிசார் எனது இரண்டாவது மகனை விசாரித்து, ஊரில் இருந்த எனக்கு தகவல் சொல்லி, நான் மருத்துவமனைக்கு வந்து என் மகனை பார்த்தேன் என்றால், சரியல்ல. அதன் பிறகு 18.04.2022 அன்று என்னை காவல்நிலையத்திற்கு அழைத்து வந்து, என் கையொப்பத்தை பெற்று, போலிசாரே புகாரை எழுதிக்கொண்டார்கள் என்றால், சரியல்ல. அதனால் தான் சம்பவம் நடந்து 9 நாட்களுக்கு பிறகு புகாரும் முதல் தகவல் அறிக்கையும் நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

5. அதனால் தான், நான் சுந்தரம் மருத்துவமனையில் பணிபுரிந்ததாக புகாரில் போலிசார் எழுதிக்கொண்டார்கள் என்றால், சரியல்ல. போலிசார் சொல்லிக்கொடுத்து, பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எதிரியினால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

என்னால்/ என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் எழுதப்பட்டு, சாட்சிக்கு விளக்கப்பட்டு/படித்து காண்பிக்கப்பட்டு, அது சரியென வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

*Sd/- M.Anusuruthi,*
JM-I
Tiruchirappalli.

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. I,

**<u>Present : Tmt.M.Anusuruthi, B.A.,B.L.,(Hons)</u>**

**Judicial Magistrate No.I,**

**Tiruchirappalli.**

## CC.843/2022

Deposition of Witness: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | நீலமேகம் | Father Name | சண்முகம் |
| Village | நகர் | Taluk | திருச்சி |
| Calling | | Age | 32/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969(Central Act 44 of 1969) on the day of 10.07.2025

(எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**<u>முதல் விசாரணை(அரசு தரப்பில்)</u>**

1. நான் தற்போது திருச்சி, லால்குடி தாலுக்கா, நகர் கிராமத்தில் வசித்து, லேப்டாப் ஷோரூமில் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 எனது மாமா ஆவார். விபத்தில் இறந்துபோன எனது மாமா ஆவார். 11.04.2022ம் தேதி நான் எனது வேலை முடித்து விட்டு வரும்போது, என் மாமா சிவக்குமார் மற்றும் சுதாகர் ஆகியோர் வண்டியில் வரும்போது, விபத்து ஏற்பட்டுவிட்டதாக சொல்லி, எனது ஊர்க்காரர் எனக்கு போன் மூலமாக தகவல் தெரிவித்தார்கள். நாங்கள் வேகமாக அண்ணாசாலையில் இருந்து காவேரி பாலத்தின் நுழைவு பகுதிக்குள் வருவதற்குள் விபத்தில் அடிப்பட்ட நபரை திருச்சி அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டார்கள்.

2. நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். இது சம்பந்தமாக அ.சா.1 புகார் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். போலிசார் என்னை சம்பவயிடத்திற்கு அழைத்து சென்றார்கள். அங்கு போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு, படம் வரைந்தார்கள். அதில் நானும், பரிதி என்பவரும் அதில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அன்றையதினம் இரவு 11.30 மணிக்கு கையொப்பம் செய்தோம். **(பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில் )</u>**

1. பின்னிட்டு, காவல்நிலையத்தில் வைத்து பார்வை மகஜரில் கையொப்பம் செய்தேன் என்றால், சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

என்னால்/ என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் எழுதப்பட்டு, சாட்சிக்கு விளக்கப்பட்டு/படித்து காண்பிக்கப்பட்டு, அது சரியென வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

***Sd/- M.Anusuruthi,***

JM-I

Tiruchirappalli.

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. I,

**<u>Present : Tmt.M.Anusuruthi, B.A.,B.L.,(Hons)</u>**

**Judicial Magistrate No.I,**

**Tiruchirappalli.**

## CC.843/2022

Deposition of Witness: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | சுதாகர் | Father Name | நடராஜன் |
| Village | நகர் | Taluk | லால்குடி, திருச்சி |
| Calling | | Age | 36/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969(Central Act 44 of 1969) on the day of 10.07.2025

(எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**<u>முதல் விசாரணை(அரசு தரப்பில்)</u>**

1. நான் தற்போது திருச்சி, லால்குடி, நகர் கிராமத்தில் வசித்து, சாரதாஸ் ஜவுளிக்கடையில் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 நடராஜன் என் அப்பா, அ.சா.2 நீலமேகம் என் மாப்பிள்ளை, விபத்தில் இறந்துபோன சிவக்குமார் என் அண்ணன் ஆவார். கடந்த 11.04.2022ம் தேதி இரவு 09.45 மணிக்கு மேல் வேலை முடித்துவிட்டு, வீட்டிற்கு செல்வதற்காக எனது இருசக்கர வாகனத்தில் நான் வண்டியை ஓட்ட, என் அண்ணன் சிவக்குமார் பின்னால் அமர்ந்துகொண்டு வந்தபோது, அண்ணாசாலை, மேம்பாலம் அருகே சத்யம் ஹோட்டல் எதிர்புறம் வந்தபோது, 7773 என்ற பதிவெண் கொண்ட ஒரு பிக்கப் வாகனம் அதிவேகமாக வந்து, எங்களது வாகனத்தின் மீது மோதியதில், எனது இரண்டு கைகளிலும் அடிப்பட்டது. என் அண்ணன் மீது வண்டி ஏறி இறங்கியது.

2. என்னை Frontline மருத்துவமனைக்கு ஆட்டோவில் அழைத்து சென்றார்கள். என் அண்ணன் சிவாக்குமாரை 108 ஆம்புலன்ஸில் திருச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அந்த பிக்கப் வண்டியை ஓட்டி வந்த நபர் ஆஜர் எதிரி தான். Frontline மருத்துவமனையில் எனக்கு முதலுதவி சிகிச்சை மட்டும் அளிக்கப்பட்டது. என் அண்ணன் சிவக்குமார் இறந்தபிறகு என்னை என் அண்ணன் வீட்டிற்கு அழைத்து சென்றார்கள். மறுநாள் என்னை திருச்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அங்கு எனக்கு 7 நாட்கள் சிகிச்சை அளிக்கப்பட்டது. அங்கு எனக்கு சரிவர சிகிச்சை அளிக்கப்படாததால், SRM சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அரசு மருத்துவமனையில் எனக்கு எந்த Discharge summaryயும் கொடுக்கவில்லை.

3. SRM மருத்துவமனையில் நான் இரண்டு மாத காலமாக வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வந்தேன். எனது அண்ணன் சிவக்குமாரின் உடலை பிரேத பரிசோதனைக்கு பின் மறு நாள் பெற்றுக்கொண்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில் )</u>**

1. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை என்னுடைய போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றாலும், தற்போது தான் முதல்முறையாக நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றாலும், சரியல்ல. Frontline மருத்துவமனைக்கு நானாகவே நடந்து சென்று, சிகிச்சை பெற்றேன் என்றாலும், வலது கையில் ஒரு சின்ன சிராய்ப்பு காயத்திற்கு மட்டும் மருந்து தடவிய பிறகு, நானாகவே, மருத்துவமனையில் இருந்து சென்றுவிட்டேன் என்றால், சரியல்ல. விபத்து நடந்த இடம், காவேரி பாலம், ஸ்ரீரங்கம் பாலம், மேலசிந்தாமணியில் இருந்து வரும் ரோடு ஆகியவை சந்திக்கும் இடம் என்றால், சரிதான். அங்கு சிக்னல் இருக்கும் என்றால், சரிதான்.

2. நான் சம்பவத்தின்போது, நான் ஓட்டி சென்ற வாகனத்தை இடதுபக்க தடுப்பு சுவரின் மீது மோதி கீழே விழுந்ததில் தான், என் அண்ணனுக்கு காயம் ஏற்பட்டது என்றாலும், அதனால் தான் எங்கள் இருசக்கர வாகனத்திற்கு இடதுபக்கம் சேதம் ஏற்பட்டது என்றாலும், சரியல்ல. எதிரியினால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றாலும், என்னுடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்பட்டது என்றாலும், சரியல்ல. எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் தான், நான் என்னுடைய ஓட்டுநர் உரிமத்தை ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. என்னுடைய ஓட்டுநர் உரிமம் காணாமல் போய்விட்டது. நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் என்னுடையது அல்ல என்றால், அது என்னுடையது தான். அந்த வாகனம் லெட்சுமி என்பவருக்கு சொந்தமான வாகனம் என்றால், சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

என்னால்/ என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் எழுதப்பட்டு, சாட்சிக்கு விளக்கப்பட்டு/படித்து காண்பிக்கப்பட்டு, அது சரியென வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

*Sd/- M.Anusuruthi,*
JM-I
Tiruchirappalli.

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. I,

**<u>Present : Tmt.M.Anusuruthi, B.A.,B.L.,(Hons)</u>**

**Judicial Magistrate No.I,**

**Tiruchirappalli.**

## CC.843/2022

Deposition of Witness: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | பிரகாஷ் | Father Name | ராமையன் |
| Village | மாந்துறை | Taluk | லால்குடி, திருச்சி |
| Calling | | Age | 37/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969(Central Act 44 of 1969) on the day of 10.07.2025

(எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**<u>முதல் விசாரணை(அரசு தரப்பில்)</u>**

1. நான் திருச்சி, லால்குடி, மாந்துறையில் வசித்து, பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மாமனார், அ.சா.2 நீலமேகம் எனது பக்கத்து வீட்டுக்காரர், அ.சா.3 சுதாகர் சிவக்குமாரின் தம்பி. வழக்கில் இறந்துபோன சிவக்குமார் எனது மச்சினன் ஆவார். கடந்த 11.04.2022ம் தேதி இரவு 10.00 மணியளவில் அண்ணாசிலை அருகே காவேரி பாலத்தில் ஏறும் இடத்தில், சிவக்குமார் மற்றும் சுதாகர் இருசக்கர வாகனத்தில் சுதாகர் வண்டி ஓட்ட, சிவக்குமார் பின்னால் அமர்ந்து சென்று கொண்டிருந்தார்கள். நானும், என் மாமனாரும் என்னுடைய வாகனத்தில் அவர்களுக்கு பின்னால் 5 அடி தூரத்தில் சென்று கொண்டிருந்தோம்.

2. 7773 என்ற பதிவெண் கொண்ட ஒரு பிக்கப் வாகனம் வேகமாக வந்து, அண்ணாசிலை அருகே காவேரி பாலத்தில் ஏறும் இடத்தில், சத்யம் ஹோட்டல் எதிர்புறம் வந்தபோது, அவர்கள் சென்ற இருசக்கர வாகனத்தில் மோதியதில், சுதாகருக்கு இரண்டு கைகளிலும் காயம் ஏற்பட்டது. சிவக்குமாருக்கு பிக்கப் வண்டி நெஞ்சில் ஏறியது. பின்னர், சிவக்குமாரை 108 ஆம்புலன்ஸில் திருச்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். சுதாகரை Frontline மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அந்த பிக்கப் வாகனத்தை ஓட்டிய நபர் ஆஜர் எதிரிதான். சிவக்குமார் அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டார். மறுநாள் சிவக்குமாரின் உடலை பெற்றுக்கொண்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில் )</u>**

1. போலிசார் என்னை விசாரித்தார்கள். நானும் நடராஜனும் சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவெண் மற்றும் என்ன வகையான வாகனம் என்று போலிசாரிடம் தெரிவித்திருந்தேனா என்றால், இல்லை. இருசக்கர வாகனம் என்று தான் தெரிவித்தேன். சிவக்குமாரை 108 ஆம்புலன்ஸில் ஏற்றி சென்றபோது, நானும், அ.சா.1 என் மாமனாரும் உடன் செல்லவில்லை என்றால், சரிதான். சுதாகரை Frontline

மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது, நானும், அ.சா.1 என் மாமனாரும் உடன் செல்லவில்லை என்றால், சரிதான்.

2. நான் எங்கு வேலை பார்க்கிறேன் என்றால், தில்லை நகரில் பெயிண்டராக வேலை பார்க்கிறேன். என் மாமனார் மாயாஸ் ஹோட்டலில் securityஆக வேலை பார்த்தார். என் மாமனார் சுந்தரம் மருத்துவமனையில் அன்றையதினம் வேலை பார்க்கவில்லை என்றால், சரிதான். நான் சொல்வது போல அன்று நானும், அ.சா.1 இருசக்கர வாகனத்தில் செல்லவில்லை என்றால், சரியல்ல. பின்னிட்டு போலிசார் தகவல் சொல்லி நானும் அ.சா.1ம் அடுத்த நாள் மருத்துவமனைக்கு வந்து, இறந்து போன சிவக்குமாரின் உடலை பார்த்தோம் என்றால், சரியல்ல.

3. நான் அ.சா.1 மருமகன் என்பதால், பின்னிட்டு, என்னை போலிசார் கண்ணுற்ற சாட்சியாக காட்டப்பட்டுள்ளேன் என்றால், சரியல்ல. காயம்பட்டவர்களும், புகார் கொடுத்தவரும் உறவினர்கள் என்பதால், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எதிரியினால் இந்த விபத்து நடக்கவில்லை என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

என்னால்/ என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் எழுதப்பட்டு, சாட்சிக்கு விளக்கப்பட்டு/படித்து காண்பிக்கப்பட்டு, அது சரியென வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

***Sd/- M.Anusuruthi,***
JM-I
Tiruchirappalli.

VerdictumIn